1034 ௪

REGD. No. M. 2913. ARYA DHARMAM
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம். [தபால் சிலவுள்பட]		
ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு		
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்		

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஸு ஆவணி-மீ 14உ 1940-ஸு ஆகஸ்டு-மீ 29உ | ஸ-34

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

ஸ்ரீமுகத்துடன் ஸ்ரீ லலிதோபாக்யாநம்!! ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ பகவத்பாதாள், தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட ஸ்ரீ லலிதோபாக்யாநத்திற்கு மிக அருமையான ஓர் ஸ்ரீ முக ப்ரஸாத மனுப்பியிருக்கிறார்கள்! ஸ்ரீ சாரதா நவராத்ரியில் தேவி பக்தர்களுக்கு படிக்க கிடைக்கும்!!

இச்சிறு கௌரவங்கூட கூடாதா? தான் மேயராயிருப்பதற்குள் ஓர் அரிய தொண்டு செய்து ஒப்பற்ற கீர்த்தி பெற ஆசை கொண்டார். ஸ்ரீ ஸத்ய மூர்த்தி. முதலில் ஆபீஸ் ஊழல்களைத் திருத்த முயன்றார். அது அஸாத்யமென கண்டு பூண்டி திட்டத்தை துரிதப்படுத்தினார். அதில் பொறாமை கொண்டவர்கள்காங்கிரஸ் விதியை மீறினர் என்று காட்டபகீரத ப்ரயத்நம் செய்தனர்!

ஆபத்பந்து!!செலவு யாருடையது? அடுத்த க்ஷணம் ஜீவித்திருப்பது நிச்சயமில்லைஎன்ற ஸித்தாந்தம் மேல்நாட்டில் விசேஷமாக லண்டனிலுமிப்போது கண் கூடாக காணப்படுகிறது! ஸ்வதேச, பந்துக்களை விட்டு அடைக்கலமாக சென்னைக்குவந்தவெள்ளைக் குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பந்துவாயிருந்து வரவேற்போம்.

யார் பொறுப்பாளி? ஸிந்துமாகாண க்ராமவாஸி ஹிந்துக்கள் உயிருக்கும் சொத்துக்கும் ஆபத்தென நகரம் வருகிறார்கள். ஜில்லா கலெக்டரும் போலீஸ் ஸர்கில் இன்ஸ்பெக்டரும் என்ன செய்கின்றனரோ? கவர்னர் உடனே கவனிக்க வேண்டுகிறோம்.!

மறுபடியும் இருவீரர் ஸந்திப்பு !! ஸர். ஸி. பி. நிர்வாஹ அங்கத்தினராயும் ஸ்ரீ ஸத்ய மூர்த்தி எதிர்கக்ஷியிலுமிருந்தபோது சென்னை சட்டஸபை மிகவும் சுவையாக இருந்தது. பின்னவருக்கு வாக்வீர்ய மதிகம். முன்னவருக்கு நிர்வாஹ ஸாமார்த்யமுண்டு. திருவாங்கூருக்கு அவர், விருந்தினராக சென்றும் இருவரும் முன்போலவே கண்டாத்தை விடவில்லை !!

ஸ்ரீ எஸ். மூர்த்தி திவானாயிருந்தால்? ஸர். ஸி. பி. ஏழாண்டுகள் இந்தியா ராணுவப் பயிற்சியிலீடுபட்டால் படைக்காகலாமென்கிறார். மூர்த்தியும் பொறுப்புள்ள பதவி பெற்றால் இப்படித்தான் பேசுவார் !! அவரை கேவலசப்த உலகிலும் முன்னவரை கையைக்கட்டி வியவஹார உலகிலும் விட்டிருக்கின்றனர். இருவரும் பூர்ண நற்பெயரை பெறாதது துரதிருஷ்டமாகும்.

ஸர். ஆலிவர் லாட்ஜ் இறந்தார் !!

ஹேதுவாதிகளான பாரதர் இதரத்வீபங்களில் பிறப்பதாக ஸ்காந்தம் கூறுகிறது. பல இந்திய ஜீவர்கள் மேனாட்டில் பிறக்கின்றனர். விக்ஞான சாஸ்திரத்துடன் ஆத்மக்ஞாநத்திலும் பேரவாகொண்டு பல நூல்களை இயற்றிய இவர் சென்றவாரம் மறைந்தார்.

ஜன நாயகத்தின் விபரீதம்.

படிப்பில்லாதவர்களும் பிரதிநிதியாகி விடுகிறார்கள்.

தேசம் கேட்டுவிட்டது.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் 22-உ யன்று திருவல்லிக்கேணியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் பின்வருமாறு கூறினர்.

"கல்வி விஷயம் தெரியாதவர் எல்லையில்லாமல் பேசிவருவதை நான் கண்டிக்கிறேன். விஷயம் தெரியாதவர்களுடைய பேச்சினால் நமது தேசம் மிகவும் கெட்டுப்போய்விட்டது.

ஒரு வீடுகட்ட பிளான் போடுவதற்கு இஞ்ஜினீயர் வேண்டியிருக்கிறது. வைத்தியம் செய்வதற்கு டாக்டரைக் கூப்பிடுகிறோம். ஆனால், அரசியல் விஷயத்திலோவென்றால் முனிசிபாலிடி, சட்ட ஸபை அங்கத்தினர் பதவிக்கும், மந்திரி பதவிக்கும் யார் வேண்டுமானாலும் வந்து விடுகிறார்கள். இதனால் தேசத்திற்கு கஷ்டம்."

ஸர்விஸ் கமிஷனும் ஸம்ஸ்கிருதமும்

உத்திரவு திருத்தப்பட்டது.

சென்னை பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் நடத்தும் உத்யோக பரீக்ஷைக்கு ஸம்ஸ்கிருதத்தை உபபாஷையாக எடுத்துக்கொண்ட மாணவர்கள் ஆஜராகக் கூடாதென்று ஒரு உத்திரவு போடப்பட்டிருந்ததையும் அதைப் பற்றி எங்கும் பலத்த கண்டனம் ஏற்பட்டதையும் யாவரும் அறிவர்.

இப்போது கவர்ன்மெண்டார் அந்த உத்திரவைத் திருத்தியிருக்கிறார்கள். அதாவது ஸர்விஸ் கமிஷன் பரீக்ஷைக்கு ஆஜராகும் மாணவர்கள் தமிழ் முதலிய அந்தந்த தேச பாஷையில் நல்லப் பயிற்சியுள்ளவர்களாய் இருந்தால் போதுமென்றும், இது விஷயமாக அவர்கள் கலெக்டரிடமிருந்து ஸர்டிபிகேட் பெற வேணுமென்றும் அந்த உத்திரவில் சொல்லப்பட்டிருக்கிறது, ஆதலால் பள்ளிக்கூடங்களில் அவர்கள் ஸம்ஸ்கிருதம் முதலிய எந்த பாஷையை உப பாஷையாக எடுத்துக்கொண்ட போதிலும் அதைப்பற்றி ஸர்விஸ் கமிஷன் கவனிக்காது.

கும்பகோணம் அத்வைத ஸபை

இச்சபையின் இவ்வருஷத்திய ஸதஸ்ஸானது ஆவணி-மீ 12உ செவ்வாய்க்கிழமை காலையில் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்கள் ஸ்ரீ மடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வாரம் வரையில் வழக்கம் போல் வாசிக, லேக பரீக்ஷைகளும், வாக்யார்த்தங்களும் நடைபெறும். "தர்மக்ஞ" "கிருஷ்யக்ஞ" பட்ட பரீக்ஷைகளும் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு தினத்திலும் மாலை 5 மணிக்கு ஸபைக்கு வந்துள்ள பண்டிதர்களும், மாலை 7மணிக்கு பரீக்ஷாதிகாரிகளும்அனேகமுக்ய விஷயங்களைப்பற்றி உபந்யாஸித்து வருகிறார்கள். வெளியூர், உள்ளூர்களிலிருந்து வழக்கம்போல் அநேக வித்வான்கள் விஜயம் செய்திருக்கிறார்கள். போஜன வசதி முதலியவைகள் நன்கு செய்யப்பட்டிருக்கின்றன. செப்டம்பர் 3உ ஸபை முடிவு தினத்தில் வித்யா வாசஸ்பதி மஹா மஹோபாத்யாய பிரும்மஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் அக்ராஸனம் வகித்து வித்வத்ஸம்பாவனைவழங்குவார்கள்.

தக்ஷிணாயன பிரதம விவாஹத்தைப்பற்றி ஸபையில் சர்ச்சை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (க-சி)

ஸ்ரீராமர் வாலிக்கு ஸமாதானம் கூறல்

தர்ம சூக்ஷ்மம்

(திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் மாஜி ஹெட்மாஸ்டர் குலபதி. பி. எ. சுப்ரமண்ய அய்யர்)

இதற்கு முன்வந்துள்ள 3ம் கட்டுரை கடைசிபாராவில் வாலிக்கு பிரபுவின் ஸங்கல்பத்தாலும் கடாக்ஷ வீக்ஷணத்தாலும் சித்தம் தெளிந்து, பரிசுத்தனாகி ஆகி, தனக்கு முன் நின்ற ஸ்ரீராமர் மகாவிஷ்ணுவின் அவதாரமென்றும், அவர் இந்த அவதாரத்தில் சரணாகத தர்மத்தை ஸ்தாபிக்க வந்தார் என்றும், அதாவது, தர்ம சூக்ஷ்மத்தை வாலி அறிந்து கொண்டான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தர்ம சூக்ஷ்மம்' என்றதற்கு இந்த அர்த்தம் எவ்வாறு வந்தது என்பதை சற்று விளக்குவோம்.

தர்ம சூக்ஷ்மம் என்பது என்ன?

தர்ம சூக்ஷ்மம் என்பதற்கு மேற்சொன்ன அர்த்தம் என்று கோவிந்தராஜனும், மகேச்வர தீர்த்தானும் எழுதியிருக்கிறார்கள். எங்கே? யுத்தகாண்டம் 18ம் ஸர்க்கம் 7வது ச்லோகத்துக்கு எழுதியுள்ள வியாக்யானத்தில். அவை பின்வருமாறு: கோவிந்தராஜாள்: அத தர்ம சூக்ஷ்மாங்அநபிஜ்ஞஸ்ய. மஹேச்வரதீர்த்தாள்: மமபரமாம் சக்திம் சரணாகத ஸம்ரக்ஷணம்.

வாலி தர்ம சூக்ஷ்மத்தை அறியாததற்கு காரணங்கள்

இந்த தர்ம சூக்ஷ்மத்தை, அதாவது, ஸர்வேச்வரனுடைய நிஜ ஸ்வரூபத்தையும், அவர் ஜீவான்மாக்கள் கடைதேறுவதற்கு என்ன தர்மங்களை, எப்படி, அந்த ஜீவான்மாக்கள் அனுஷ்டிக்க வேண்டும் என்று உபதேசித்திருக்கிறார் என்றதையும், நாமெல்லோரும் அறிந்து கொள்வதற்காக விஸ்தாரமாக பிரபு வாலிக்கு 18ம் ஸர்க்கத்தில் உபதேசித்திருக்கிறார். ஸாரம் பின்வருமாறு'—

4வது, 5வது ச்லோகங்கள். வேதம் சாஸ்த்ரம் இவைகளை மகா புத்திமான்களும் வயது சென்றவர்களும், பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களுமானவர்களை வழிபட்டு, சரணாகதி பண்ணி அப்யாஸம் செய்து நாம் தெரிந்து கொள்ள வேண்டுமாம். அந்தக் காலத்தில் ஸ்திர புத்தியுடன் இருக்க வேண்டும்.

15ம் ச்லோகம்:- தர்மரஹஸ்யம் சுலபமாய் அறியக்கூடியதல்ல ஸகல பிராணிகளுடைய ஹ்ருதயத்திலும் ஸர்வாந்தர்யாமியான பரமாத்மா வசிக்கிறார். நாம் ஸ்திர புத்தியுடன் இருந்து தர்மத்தை ஒழுங்காய் அனுஷ்டித்து அந்த ஹ்ருதயத்திலிருக்கும் பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்க வேண்டும்-(ஆ)

16ம் ச்லோகம். வாலியோ, சபலபுத்தியுடன் இருந்து தன்னைப்போன்ற அஜ்ஞானிகளான வானரர்களுடன், பிறவிக்குருடன் பிறவிக்குருடனுக்கு வழிகாட்டுவதுபோல, யாதொரு சிக்ஷையுமில்லாது ஸகவாசம் செய்து கொண்டிருக்கிறான். ஆதலால் தர்ம சூக்ஷ்மத்தை அறிந்து கொள்ளவில்லை. மேலும், அவன் மிகுந்த கோபத்துடனும் இருக்கிறான்:—(இ)

அன்றியும், வாலி தர்ம சாஸ்த்ரங்களுக்கு முற்றிலும் விரோதமாய் பாபகர்மங்களைச் செய்து கொண்டு கேவலம் காமத்துக்கு வசப்பட்டுத் திரிகிறான். (அவன் செய்த பாபங்கள் எவை? சுக்ரீவனை ராஜ்யத்தினின்று துரத்தியது. அவன் பார்யையிடத்து செய்த அபசாரம். கேவலம் ஒரு ஸ்த்ரீ விஷயமாய் மாயாவியுடன் சண்டைக்குப் போனது மல்லாமல், தன் ராஜ்யத்தைவிட்டு தனக்கு பிரதி நிதி ஒருவரையும் ஏற்படுத்தாமல் ஓடிப்போனது, முதலியன):—(ஈ)

மேற் குறித்த (இ) பாராவில் உள்ள விஷயங்கள் நமக்கு எதை ஞாபகத்துக்குக் கொண்டு வருகின்றன? முண்டக உபநிஷத் காடக உபநிஷத், மைத்ரீ உபநிஷத்களில் உள்ள சில மந்த்ரங்களையே. அவை பின்வருமாறு:—

முண்டக உபநிஷத் 1வது முண்டகம் 1வது கண்டம் 4வது, 5வது மந்த்ரங்களில் சொல்லப்பட்டிருப்பது இது : "பரா, என்றும், அபரா, என்றும் இரண்டு வித்யைகள் உண்டு. அபரா வித்யை ரிக் முதலிய வேதங்கள், சிக்ஷா, கல்பம், நிருக்தம் முதலிய சாஸ்த்ரங்கள், இவைகளைக் குறிக்கிறது.எதனால் பிரம்மஞானம், அதாவது இச்வர ஸாக்ஷாத்காரம், ஒருவனுக்கு கிடைக்குமோ அதுதான் பராவித்யை.

இந்த பராவித்யையை அனுஷ்டிக்காமல், அபராவித்யை, அதாவது, கர்மமார்க்கத்தை அனுஷ்டித்தே, ஈச்வர சாக்ஷாத்காரத்தைப் பெற்று பிறப்பு இறப்பினின்றும் விடுபடலாம், மோக்ஷம் அடையலாம் என்று எண்ணுகிறவர்கள், மூடர்கள், ப்ரமூடர்கள் என்று 1வது முண்டகம், 2வது கண்டம், 8வது, 10வது மந்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மூடர்கள் எவ்விதம் நடந்து கொள்கிறார்கள்? மேற்சொன்ன 8வது மந்த்ரத்தில் அது விவரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த மூடர்கள், "மூடா: அந்தேநேவ நீயமானா யதாந்தா: பர்யந்தீ," குருடனுக்கி குருடன் வழிகாட்டுவது போல் அலைகிறார்கள்:—(இ) (கடோபநிஷத், 2ம் வல்லி, 5ம் மந்த்ரத்தையும், மைத்ரி உப 7வது ப்ரபாடகம், 9ம் மந்த்ரத்தையும் பார்க்க)-

மேலே குறிக்கப்பட்டுள்ள (இ) பாராக்கள் இரண்டினின்றும் விசதமாவது என்ன? கேவலம் கர்மமார்கிகள் மூடர்கள், குருடர்களைப் போன்றவர்கள் பிரபுவோ வாலியை பிறவிக்குருடன் என்று சொல்கிறார். (ஜாத்யந்த இவ). இதினின்றும் நாம் ஊகிக்க வேண்டியது என்ன? வாலி கார்ம மார்கியுமல்ல ஏன்? கர்மமார்கிகள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட நல்ல கர்மாக்கங்களைச் செய்கிறவர்கள். சாஸத்ரங்களுக்கு விரோதமான கர்மாக்களைச் செய்யவே மாட்டார்கள். வாலியோ செய்த கார்யங்களெல்லாம் முற்றிலும் சாஸ்த்ர விரோதம். ஆதலின் அவனைப் பிறவிக்குருடன் என்று பிரபு சொல்கிறார். இத்துடன் மட்டுமோ? இல்லை. "ஸ்வயம் தீரா: பண்டிதம் மன்யமானா:" என்று இந்த 8வது மந்த்ரத்தில் சொல்லப்பட்டுள்ளபடி, தனக்கு எல்லாம் தெரிந்ததாக பாவித்துக்கொண்டு அதிகர்வத்துடன் பிரபுவை தர்மம் தெரியாதவர், காமவ்ருத்தர் தர்மத்துக்கு விரோதமாய் நடப்பவர் என்றும் பழிக்கிறான்.

வாலியின் ஸ்வபாவம் எத்தன்மையது

1. வாலி ராஜாவாக இருந்த போதிலும் தர்ம சாஸ்த்ரங்களை ஒழுங்காக பெரியோர்களிடமிருந்து அப்யஸித்தவன் அல்ல.

2. ஸ்திரபுத்தியில்லாதவன்—சபலசித்தன் வெகு கோபிஷ்டன்

3. செய்வது துஷ்க்ருத்யங்கள் சாஸ்திரத்துக்கு விரோதமானவை.

4. அதிகர்வி. எல்லாம் சாஸ்த்ரங்களும் தனக்குச்தெரிந்தது போல் பாசாங்கு செய்பவன்

5. மனத்தையும் இந்த்ரியங்களையும் கொஞ்சமேனும் அடக்காது இஷ்டப்படி திரிகிறவன்.

6. மேலும், வாலி ராவணனையும்விட அதிக்ரூரஸ்பாவமும் நடத்தையும் உள்ளவன். எப்படி? தனக்குத்தம்பியாயிருந்து, தாஸனாக வந்து பச்சாத்தாபத்துடன் கதறி, காலில் விழுந்து சரணாகதி பண்ணின சுக்ரீவனை வாலி, ராஜ்யத்தை விட்டுத்துரத்தினான் ராவணன் கடைசியாய் பிரபுவுடன் சண்டைபோட்ட காலத்தில் (யுத் காண் 106ம் ஸர்) ஸாரதிசற்று அப்புறம் ராவணனது தேரைச்செலுத்த அதைக்கண்டு ராவணன் தனக்கு அதிகம் அவமானம் நேர்ந்ததாக எண்ணி ஸாரதியை தூஷிக்க ஸாரதிவணங்கிதான் ராவணனுடைய ஹிதத்தை கருதியே அவ்விதம் செய்ததாகவும், தான் யஜமானத்ரோஹியல்ல, எதிரியிடம் லஞ்சம் வாங்கவில்லை என்றும் நல்லவார்த்தை சொன்னவுடன் ராவணன் ஸாரதியை மெச்சியதுமல்லாமல் தனது ஹஸ்தாபரணத்தை அவனுக்குப் பரிசாகக்கொடுத்தான் (ததௌதஸ்மை........26ம் ச்லோ.)

இத்தீய குணங்களெல்லாம் உள்ளவனுக்கு பிரம்மஞானம் கிடைக்கவே கிடைக்காது என்று வேதங்கள் உபநிஷத்துகள், பகவத்கீதை மனுதர்ம சாஸ்த்ரம் முதலிய மதக்ரந்தங்கள் முறையிடுகின்றன என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம்.

தர்ம சூக்ஷ்மத்தை அறியும் வழி

இச்வர ஸாக்ஷாத்காரம் பெறவேண்டி முயற்சி செய்பவன் முதல் முதலில் செய்ய வேண்டியது என்ன? மேலே வாலியினிடத்து இருந்ததாகச் சொன்ன தீயகுணங்களை யெல்லாம் அடியோடே ப்ரயாஸப்பட்டு ஒழித்து, அவைகளுக்கு நேர் விரோதமான அனுஷ்டானங்களையும் குணங்களையும் கைப்பற்ற வேண்டும். இது மட்டும் 'போதுமா? போதாது. ஆனால் அவன் என்ன செய்ய வேண்டும்? இச்வர ஸாக்ஷாத்காரம் பெற்ற ஒரு பிரம்ம ஞானியிடம் சென்று அவரை வழிபட்டு அவரிடமிருந்து பராவித்யை, அதாவது, 'த்யானயோக, வழியை (பகவத்கீதை 6ம் அத்யாயம் பார்க்க)த் தெரிந்து கொண்டு அதன்படி நடத்தல் வேண்டும். இதை பிரபு எங்கே வாலிக்குத் தெரிவிக்கிறார்? இந்த 18ம் ஸர்க்கம் 15வது 16வது ச்லோகங்களில். என்ன சொல்லுகிறார்? "ஒவ்வொருவருடைய ஹ்ருதயத்திலும் உள்ள பரமாத்மாவை யாதொருவிதமான சிக்ஷையுமில்லாத (அக்ருதாத்மபி:) நீ எப்படிப் பார்க்க முடியும்? என்று. அதாவது, பிரபுவின் கருத்து என்ன? வாலிதனது கெட்ட குணங்களையும் துஷ்க்ருத்யங்களையும் அடியோட நீக்கி சாந்தஸ்வபாவத்தை கைக்கொண்டு பிரம்ம ஞானியான ஒரு குருவை வழிபட்டு அவரால் சிக்ஷிக்கப்பட வேண்டும் அதாவது பராவித்யை அவரிடம் கற்றுக்கொண்டு அதன்படி நடத்தல் வேண்டும் என்பதுதான் இவ்விதம் அனுஷ்டிப்பவனுக்குத்தான் ஈச்வர ஸாக்ஷாத்காரம் கிட்டுமென்று எல்லா உபநிஷத்துக்களும் பகவத்கீதையும் கூறுகின்றன.

ஸ்ரீராமர் வாலிக்கு தர்ம ஸூக்ஷ்மத்தை தெரிவித்தல்.

இந்த 18ம் ஸர்க்கத்தில் எங்கே வாலி தர்ம சூக்ஷ்மத்தைத் தெரிந்து கொண்டதாக சொல்லப்பட்டிருக்கிறது? 45-ம் ச்லோகத்தில். இந்தச்லோகத்துக்கு திவ்யமாய் எழுதப்பட்டுள்ள திலகவியாகயானத்தைப் படிப்பவர்களுக்கு இது விஷயம் தெளிவாகும்.

யுத்தத்தில் பிரிட்டன் ஜயம்பெற பிரார்த்தனை

கும்பகோணத்தில் நடந்த விவரம்

பிரகிருத யுத்தத்தில் நமது சக்கரவர்த்தி ஜயம் பெறவும் அவருடைய பிரஜைகளும் ராஜ்யங்களும் க்ஷேமத்துடன் வாழவும் வேண்டி, பண்டிட், மஹாமஹோபாத்யாய, ஆர். வி. கிருஷ்ணமாசாரியார் அவர்களால் கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி கோவிலில் 19-உ திங்கள்கிழமை முதல் 23-உ வெள்ளிக்கிழமை முடிய ஐந்து தினங்களில் ஒரு பெரிய பிரார்த்தனை யக்ஞம் நடத்தப்பட்டது.

யுத்த ஆபத்தை நீக்குவதற்கென்றே வேதங்களில் படிக்கப்பட்டுள்ள மிகுந்த சக்தி வாய்ந்த மந்திரங்கள் இந்த பிரார்த்தனையில் உபயோகிக்கப்பட்டன.

மிகுந்த பக்தி சிரத்தையுடன் அநேக வைதிக வித்வான்கள் திரளும் இதில் கலந்து கொண்டு பிரார்த்தனை நடத்தினார்கள்.

23-உ யன்று இந்த பிரார்த்தனை பூர்த்தியை முன்னிட்டு மேற்படி கோவிலில் ஓர் பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. பொது ஜனங்களின் நன்மதிப்பைபெற்ற பிரபல நகரத் தலைவரான ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸஅய்யங்கார் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார் ஸ்திரீகள் உள்பட எல்லாவகுப்பு ஜனங்களும் அங்கு கூடியிருந்தனர். அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியார், இந்த பிரார்த்தனையில் உபயோகிக்கப்பட்ட வேத மந்திரங்களின் கருத்தைத் தமிழில் விவரித்துக்கூறினர்.

ஆகாசவிமானங்கள் மூலம் ஏற்படும் ஆபத்துக்களைத்தடுத்து பிரஜைகளையும், அரசனையும் காப்பாற்றும்படி விஷ்ணு தேவதையை ஒரு மந்திரத்தால் பிரார்த்திக்கப்பட்டது.

தேவதைகள் இந்த ராஜ்யத்தைக் காப்பாற்றவும், சத்ருக்களால் ஜயிக்க முடியாத பலம் பெறும்படியும் மற்றொரு மந்திரத்தால் பிரார்த்திக்கப்பட்டது:

யுத்தத்தில் ஈடுபட்ட நமது யுத்தவீரர்களுக்கு, எதிரியின் யுத்தகருவிகளால் எவ்வித உபத்திரமும் நேராமல் பாதுகாக்கவும் எதிரிகளை முறியடித்து ஜயம்பெறவும் கோரி "அப்ரதிரத" மந்திரஜபத்தால் பிரார்த்திக்கப்பட்டது.

நமது அரசர் ஓங்கிவளரவும், பிரஜைகளுடைய அன்பும் உதவியும் இந்த யுத்தக் காலத்தில் அதிகம் ஏற்படவேண்டியும் சத்ருவை ஜயித்தபின் ஸகலஸம்பத்துடன் ராஜ்யத்தை அமைதியாகவும், ஸுபிக்ஷமாகவும் நடத்தப்பிரார்த்தித்து மற்றொரு மந்திரம் ஜபிக்கப்பட்டது.

இம்மாதிரி இன்னும் எவ்வளவோ அத்புத பிரார்த்தனை அடங்கிய மந்திரங்களின் மஹிமையை உபந்யாஸகர் எடுத்து விவரித்தார்.

கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியர் மடத்தைச்சேர்ந்த ஸ்ரீமான் நடராஜசாஸ்திரியாரும் பிரார்த்தனையின் மஹிமையைப்பற்றிப் பேசினர்.

தலைவர் முடிவுரை பேசுகையில், இந்த வேதமந்திர பிரார்த்தனையால் மிகுந்த பலன் ஏற்படுமென்று நம்புவதாயும், பிரட்டன் நல்ல சக்திவாய்ந்த தென்றும், அது ஜயிப்பது நிச்சயமென்றும், பிரிடிஷார் நல்லவர்களென்றும், அவர்கள் நமது மததர்மங்களை காப்பாற்றிவருவதாயும் இந்த யுத்தத்தில் ஜயம் பெற்று மறுபடியும் மதநடுநிலைமை விஷயமாக ஓர் பிராக்ளமேஷன் ஏற்படுமென்று நம்புவதாயும் கூறினர்

நமது சக்ரவர்த்திக்கு வெற்றி ஏற்பட வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்பதாக ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் விவரங்கள். ராஜ சக்ரவர்த்தியாருக்கும், வைஸ்ராய் கவர்னர், முதலியவர்களுக்கும் தெரிவிக்கும்படி தலைவரைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாரால், தலைவருக்கும், பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டது. (ந-நி)

ஸி. ஆர். வேண்டுகோளுக்கு மறுப்பு.

சென்னை சட்ட ஸபையிலுள்ள கக்ஷியார் எல்லோரையும் ஓரிடத்தில் கூட்டி ராஜீய நிலைமை விஷயமாக ஏதோ பேச, ஸ்ரீமான் ராஜகோபாலசாரியார் மற்ற கக்ஷிகளை அழைத்திருந்தார். ஜஸ்டிஸ் கக்ஷி, முஸ்லீம் லீக், தாழ்ந்த வகுப்பார் ஆகிய எல்லா கக்ஷியாரும் ஸி. ஆர். அழைப்பை ஏற்க மறுத்து விட்டார்கள். காங்கிரஸுக்குள்ள மனோபாவத்தை கவனிக்கையில், ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியாரின் அழைப்பை ஏற்று அந்தக்கூட்டத்தில் கலந்து கொள்ளுவதால் எவ்வித பிரயோஜனமும் ஏற்படாதென்று அந்தக்கக்ஷித்தலைவர்கள் பதில் கொடுத்து விட்டார்கள்.

மனித மாடுகளிடம் கருணை எங்கே?

ஸர். வரதாசாரியார் கேள்வி

சென்னையிலிருக்கு ஜீவகாருண்ய ஸங்கத்தின் வருஷாந்திர கொண்டாட்டவிழாவில் ஸர், எஸ். வரதாசாரியர் தலைமைவகித்து ஜீவகாருண்ய வாதிகளுக்கு ரஸமான சில விஷயங்களைக் குறிப்பிட்டார். மாடுகளை சிரமப்படுத்தாமல் கார்யங்கள் எப்படி நடக்க முடியுமென்று அவர் கேட்டார். ஜீவகாருண்ய ஸங்கத்தின் வேலைத் திட்டமே அநுபவ விரோதமென்று நிரூபணம் செய்தார்.

சென்னையில்·பாரம் இழுக்கும் வண்டி மாடுகளைப்பற்றிக் கவலைப்படும் ஜீவகாருண்ய ஸங்கத்தார் வண்டி பாரங்களையும், மனிதர்களையும் இழுத்து ஜீவிக்கும் கூலிமனிதர்களைப்பற்றி ஏன் காருண்யம் காட்டப் பட வில்லையென்றார்.

நல்ல வெய்யிலில், தார்போட்ட ரஸ்தாக்களில் கூலி மனிதர்கள் பாதரக்ஷை கூட அணியாமல் நுகத்தடியில் இரண்டுபேர்களாக மாடுகள் போல்அமர்ந்து பார வண்டிகளை இழுத்துப்போகும் பரிதாபக்காக்ஷியை ஸங்கம் கவனித்து என்ன கருணைகாட்டியதென்றும் அவர்கேட்டார். ரிக்ஷா வண்டிகளில் மனிதர்களையே மனிதமாடுகள் இழுத்துபோகிறதற்குப் பரிஹாரம் என்ன வென்றும் அவர்கேட்டார். பதில் என்ன? உலகஇயற்கையை மாற்றமுடியுமா?

கார்ய கமிட்டியின் பதில்

வைஸ்ராய் அறிக்கையை ஏற்க முடியாதாம்.

வார்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கார்யக்கமிட்டிக் கூட்டத்தில், வைஸ்ராய் அறிக்கையையும் இந்தியாமந்திரி பேச்சையும் பரிசீலித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. வைஸ்ராய் அறிக்கையானது காங்கிரஸ் கோரிக்கையை நிராகரிப்பதாக இருப்பதாயும், ஆதலால் அதை தாங்கள் ஏற்க முடியாதென்றும் டெல்லியிலும் பூனாவிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முடிவான தென்றும அந்தப்பதிலில் கூறப்பட்டிருக்கிறது. இனி காங்கிரஸ் காரர்களும், சட்டஸபை காங்கிரஸ் மெம்பர்களும் வைஸ்ராய் அறிக்கையைக் கண்டித்தும், பூனா தீர்மானத்தை வற்புறுத்தியும் எங்கும் பலத்த பிரசாரம் நடத்த வேணுமென்றும் கார்யக்கமிட்டி தூண்டி விட்டிருக்கிறது.

காங்கிரஸுக்கு ஸர். ஸி-பி. சாட்டை

பொதுஜனஆதரவை இழந்து வருகிறது

முஸ்லீம்களை கிளப்பிவிட்டது காங்கிரஸ் தான்

சென்னை மேயரான ஸத்தியமூர்த்தி திருவனந்தபுரம் சென்று 21-உ யன்று அங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் கொள்கைகளை ஆதரித்துப் பேசினர்.

அக்கூட்டத்தில் பிரஸன்னமாயிருந்த திவான் ஸர். ஸி-பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் ஸத்யமூர்த்தியின் பிரஸங்கத்திற்கு மறுப்புச்சொல்லி காங்கிரஸ் கொள்கைகளைக்கண்டித்துக் கேலிசெய்தார். அவர் சொல்லியதாவது:—

"காங்கிரஸ் அனுஷ்டிக்கும் கொள்கை காரணமாகவே ஹிந்து இந்தியா முஸலீம் இந்தியா, என்ற பிரிவினைக்கிளர்ச்சி ஏற்பட்டது.

காங்கிரஸானது கொஞ்சம் கொஞ்சமாக தேச ஜனங்களின் ஆதரவை இழந்து வருகிறது காங்கிரஸானது ஸ்வேச்சை கேட்பதின் பலனென்ன? அன்னியர் படையெடுப்பைத் தடைசெய்ய இங்கு என்ன ஆயுதமிருக்கிறது?

ராஜிய உலகில் துறவி ஒருவர் புகுந்து அநுஷ்டித்து வரும் கொள்கையால் தேசத்தில் தொல்லைகளே அதிகரித்து வருகின்றன ஸம்ஸ்தானக் கிளர்ச்சிகளுக்கும் காங்கிரஸே காரணம். ஸ்வதேச மன்னர்களும், மந்திரிகளும், காங்கிரஸ் காரர்களைவிட தேசாபிமானத்திலோ ஸாமர்த்தியத்திலோ குறைந்தவர்களல்ல. கர்னல் அமெரி மீது குற்றமென்ன? முஸ்லீம்கள் கேட்டதையெல்லாம் காந்திஜி கொடுத்து வழக்கம் பண்ணி விட்டார். இப்போதோ வென்றால் அவர் பின்வாங்குகிறார். இதனால்தான் வேற்றுமை அதிகரித்து விட்டது."

ஸ்ரீ மகாபாரதச்சுருக்கம் ஆதிபர்வம்

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணு 0 4 0

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன பிரஸ்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆ ர் ய த ர் ம ம்

விக்ரம-௵ ஆவணி-௴ 14௳

காந்திஜியின் போக்கு.

அஹிம்ஸை விஷயமாக காங்கிரஸ், தமது கொள்கையை நிராகரித்து விட்டது முதற்கொண்டு காந்திஜி அது விஷயமாகத் தமது பத்திரிகையில் ஓயாமல் வியாஸம் எழுதிய வண்ணமாயிருக்கிறார். காங்கிரஸை விட்டுத் தாம் பிரிந்து விட்டதை வெகு தெளிவாக அவர் கூறிவிட்டதால், அவர் பெயரைச் சொல்லி பிராபல்யம் அடைய இனி இடமிருக்காதென்று அஞ்சி மீண்டும் அவருடன் ஸமரஸம் செய்துகொள்ளத் திரைமறைவில் வேலை நடப்பதாகப் பத்திரிகை நிரூபர்கள் ஊஹிக்கிறார்கள். வார்தாவில் வெகு நீண்ட நேரம் மௌலானா ஆஸாதும், மற்றவர்களும் காந்திஜியுடன் ரஹஸ்ய ஸம்பாஷணை நடத்தியிருக்கிறார்கள். ஆயினும் காந்திஜி இன்னும் தமது நிலைமையை நிஷ்கர்ஷம் செய்து கொள்ளவில்லை யென்றும் கூடிய சீக்கிரத்தில் தமது நிலைமையை விளக்கி ஓர் அறிக்கை வெளியிடுவாரென்றும் தெரிகிறது இதற்கு அங்கமாகவே தான், தமது ஆப்த நண்பரான காபர்கானுக்கு அவர் அவஸரத் தந்தி யனுப்பியிருப்பதாக நினைக்கப்படுகிறது. ஆகவே மீண்டும் காங்கிரஸில் அவர் பிரவேசிக்கக்கூடுமென்றே பலர் நினைக்கிறார்கள்.

இந்த நிலைமை ஏற்பட்டதற்கு காந்திஜியின் போக்கே காரணமென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அஹிம்ஸை விஷயமாக கார்யக்கமிட்டியிலும், அகில இந்திய கமிட்டியிலும் மெஜாரிடியார் காந்தியின் கொள்கைக்கு எதிராயிருப்பது தெளிவாகிவிட்டது. மைனாரிடிகளான காந்தியர்கள் மெஜாரிடி அபிப்பிராயத்தை மதித்து அதன்படியே பணிந்து நடக்கவேண்டியதே ஜனநாயக வாதிகளின் தர்மமாகும். மற்றவர்களுக்கெல்லாம் காந்திஜி இப்படியே தான் உபதேசம் செய்வது வழக்கம். ஆனால் தன் மட்டில் இந்த ஜநநாயக தத்வத்தை காந்திஜி உதறித்தள்ளிவிட்டு, மைனாரிடிகளான அஹிம்ஸை வாதிகளான தமது சிஷ்யர்களைக்காங்கிரஸிலிருந்து விலகி விடும்படி விபரீத யோஜனை கூறினார். தாம் குறிப்பிடும் காலத்தில் அஹிம்ஸா வாதிகள் காங்கிரஸிலிருந்து வெளி வந்துவிடவேணுமென்றும், அவர்கள் தனிக்கக்ஷி அமைத்துக் கொள்ள வேணுமென்றும் அவர் யோஜனை கூறினார். இது முற்றிலும் நியாயமற்ற போக்கு என்றே ராஜீய தத்வ வாதிகள் நினைப்பார்கள். எதிலும் மிக்க உறுதியாயும் பக்ஷபாதமின்றியும், நியாயத்திற்குக்கட்டுப்பட்டும் தாம் நடப்பதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கும் காந்திஜி, இதுவரையில் தாம் நேசித்து வளர்த்துவந்த காங்கிரஸில் பிளவு ஏற்படுத்தி அதை குலைத்து விட முயற்சி எடுத்தது அவரது நிலைமைக்கு முற்றிலும் மாறானதென்று காங்கிரஸ் கோஷ்டியிலேயே நினைக்கப்படுகிறது.

முன்பு ஸி. ஆர். தாஸ் காங்கிரஸில் ஸ்வராஜ்யக் கக்ஷியை ஸ்தாபித்தபோது காந்திஜி அதை ஆக்ஷேபித்தார். மைனாரிடிகள் மெஜாரிடிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றார். ஸ்ரீ ஸுபாஷ்போஸ் விஷயத்திலும் காந்திஜி நடந்துகொண்டது யாவரும் அறிந்த விஷயம். மெஜாரிடியார் அபிப்பிராயத்தை மதித்து ஸ்ரீயுத போஸ் காங்கிரஸ் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்யவேண்டுமென்று வற்புறுத்தவில்லையா? தாஸ். போஸ், ராய் போன்றவர்கள் காங்கிரஸில் இருந்துகொண்டபடியே அதற்குள் தனிக்கக்ஷியமைத்துப் போராடினார்கள். அதனால் காங்கிரஸ் மெம்பர்களின் ஸங்கியை குறையவோ, காங்கிரஸுக்கு எதிர்க்கக்ஷியாக அவர்கள் ஏற்படவோ இடமில்லாமற் போய்விட்டது.

ஆனால் காந்திஜியின் பிரவிருத்தியோவென்றால் காங்கிரஸை பலஹீனப்படுத்துவதாயிருக்கிறது. காங்கிரஸிலிருப்பவர்களை ராஜிநாமா செய்து விலகிவிடும்படியல்லவோ காந்திஜீ கூறுகிறார்? மேலும் காங்கிரஸுக்கு எதிராக அவர் புதுக்கக்ஷியையும் அமைக்க விரும்புகிறாரல்லவா? இது காந்திஜியின் உறுதிக்கும், பக்ஷபாதமின்மைக்கும் ஏற்றதாயிருக்குமாவென்றே பலரும் நினைக்க நேரிடுகிறது.

எப்படியும் தனிக்கக்ஷியமைப்பதாக காந்திஜீ பயமுறுத்தியதைக்கண்டே மற்ற காங்கிரஸ் தலைவர்கள் பயந்து இப்போது அவரிடம் ஸமாதானம் செய்து அவரை காங்கிரஸுக்குத் திருப்பப் பாடுபடுவதாகத் தெரிகிறது. காந்திஜி மீண்டும் காங்கிரஸுக்கு வருவதால் நன்மையா, தீமையாவென்பது வேறு விஷயம். ஆனால் அவருடைய உயர்ந்த தன்மைக்கு மேற்கண்ட ஸம்பவங்கள் பொருந்துமாவென்பதே கேள்வி.

ஸி. ஆர். தந்திர யோஜனை !

ஹிந்து முஸ்லீம் வேற்றுமை அதிகரித்ததற்கும் முஸ்லீம்கள் அதீதக்கோரிக்கைகளை வற்புறுத்தவும், அதற்கு ஸர்க்கார் செவிசாய்க்கவும் நேர்ந்திருப்பதற்கு காங்கிரஸ்தான் முக்யகாரணமென்று தேசத்தில் புகார் இருந்து வருகிறது.

இதை ஊர்ஜிதப்படுத்தும் தோரணையிலேயே மேல் மேலும் காங்கிரஸ் நடந்துகொள்ளுகிறது, இப்போது கார்யக்கமிட்டியில் பிராபல்யம் அடைந்துவரும் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியர் முஸ்லீம்களை ஸரிக்கட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் தந்திரமான ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்தியா கவர்மெண்டில் தேசீயகவர்மெண்ட் அமைப்பதாயிருந்தால் முஸ்லீம் லீக் பிரதிநிதியொருவரை பிரதான மந்திரியாக நியமிக்கவும், அவரிஷ்டப்படி மந்திரிஸபை அமைத்துக்கொள்ளவும் தாம் ஸம்மதிப்பதாயும் காங்கிரஸ்ஸை ஸம்மதிக்கும்படி செய்வதாயும் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இதன் மூலம் ஜனநாயக தத்வத்தையே அவர் பலிகொடுத்து விட்டதாக ஏற்படுகிறது. மெஜாரிடிக் கக்ஷியிலிருந்து மந்திரிஸபை அமைக்கவேண்டுமென்ற நியாயம் எங்கே ?

ஆனால் இந்த தந்திரத்தை முஸ்லீம்கள் ஏற்கமறுத்து விட்டார்கள். சட்டஸபையில் ஹிந்து மெஜாரிடியை வைத்துக் கொண்டு ஒரு முஸ்லீமை பிரதமமந்திரியாக வைத்து ஆக்ஷிநடத்துவதிலுள்ள அஸம்பாவிதத்தை அவர்கள் எடுத்துக் காட்டி இதுவெறும் ஏமாற்றும் தந்திரமென்று கண்டிக்கிறார்கள்.

காலேஜ்களிலும் வகுப்பு வாரிமுறை

ஸெலக்ஷன் கமிட்டி ஏற்படுத்த முடியாது.

சென்னை ஸர்க்கார்முடிவு,

சென்னை மாகாணத்திலுள்ள வகுப்பு வாதிகளின் விஷமயோஜனைக்கு சென்னை ஸர்க்கார் ஆதரவு கொடுக்கமறுத்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

கவர்ன்மெண்ட் உத்யோகங்களில் பிராம்மண ஸமூஹத்திற்குச் செய்த துரோஹத்தைப்போல் பள்ளிக்கூடங்களிலும் பிராம்மண மாணாக்கர்களைச் சேரவொட்டாமல் தடுத்து ஹிம்ஸிக்க ஒரு யோஜனை சொல்லப்பட்டது.

கவர்ன்மெண்ட் காலேஜ்களில், ஓர் பொறுக்குக் கமிட்டியை ஏற்படுத்தி மாணாக்கர்களை வகுப்பு வாரி வீதத்தின்படி சேர்க்க வேண்டுமென்று கேட்டார்களாம். ஏற்கனவே இம்மாதிரி செய்து பார்த்ததில் பலன் ஒன்றுமில்லாததால் அந்த முறை ரத்து செய்யப்பட்டு விட்டது ஆயினும் அதை மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்று வகுப்பு வாதிகள் கூச்சலிட்டதற்கு ஸர்க்கார் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

வகுப்பு வாரி முறையானது உத்தியோகத்திற்கு ஏற்றதாயிருந்தாலும் படிப்பு விஷயத்தில் தகாதென்றும், படிப்பு ஸ்தலங்கள் பொதுவாக அமைக்கப்பட்டிருப்பதால் எல்லா வகுப்பாரும் அவைகளை உபயோகித்துக்கொண்டு பயன் அடைவது அவர்களையே பொறுத்ததென்றும் ஆதலால் பொறுக்கு கமிட்டி ஏற்படுத்த முடியாதென்றும் ஆயினும் காலேஜ் தலைவர்களுக்கு ஸர்க்கார் எழுதி, கூடிய வரையில் பிற்போக்கு வகுப்பார்களுக்கு ஆதரவு காட்டும்படி சொல்லியிருப்பதாயும் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

மன்னர்பிரானுக்கு விண்ணப்பம்

மதுரை ராவ்சாகிப் ஸ்ரீ நடேசய்யர் மாட்சிமை பொருந்திய நமது மன்னர்பிரானுக்கு சென்னை ஆலயப்பிரவேச சட்டத்தைப் பற்றிய மிகுந்த விவரங்கடங்கிய ஒரு விண்ணப்பத்தை அனுப்பியுள்ளார். விண்ணப்பத்திலுள்ள முக்கிய கருத்துக்களை விளக்கி ஒரு தனி கடிதமும் எழுதியுள்ளார். சம்பிரதாயப்படி மற்றும் ஓர் விண்ணப்பத்தின் நகலை சென்னை அரசாங்கம் மூலமாக போவதற்காக அனுப்பியிருக்கிறார்.

சென்னை மந்திரி சபையின் அநீதி ஆட்சியாலும், ஆலயப்பிரவேச சட்டத்தாலும் ஸநாதனிகள் கோவில் பிரார்த்தனைகளால் ஏற்படும் மத சம்பந்தமான மனோல்லாசத்தை இழந்து விட்டார்களென்றும், அதனால் அவர்கள் படும் கஷ்டமும் துக்கமும் விவரிக்க முடியாதென்றும் சொல்லியிருக்கிறார். ஆலயப் பிரவேச சட்டத்திற்கு மிகுந்த எதிர்ப்பு இருப்பதற்கு அத்தாட்சியாக சென்னை கவர்னரின் ஆலோசனை சபை அங்கத்தினராகிய ஜி. டி. போக் என்பவர் கடிதம் எழுதியுள்ளதையும் தெரிவித்திருக்கிறார்.

வழக்கமாக வரும் ஜனங்கள் கோவில்களுக்கு வருவதை நிறுத்தி விட்டார்கள் என்றும், தீண்டாதார்கள் கோவிலுக்கு வர இஷ்டப்படவில்லை யென்றும், அதனால் கோவில்கள் பாழடைந்திருக்கிறதென்றும், அப்படி கோவில்கள் சீர்கேடான நிலையில் இருந்தால் ராஜ்யம் சீரழிவ தோடல்லாமல், பஞ்சம் வெள்ளம், பிணி முதலிய ஆபத்துக்களுண்டாகுமென்றும் விளக்கியிருக்கிறார்.

திருட்டுத்தனமான ஆலயப் பிரவேசம் நடந்த விதத்தைப்பற்றியும், அச்செய்கை சட்ட விரோதமாக இருந்த படியால், சென்னை மந்திரி சபை பிறகு அது சம்பந்தமான சட்டங்கள் இயற்றியதைப்பற்றியும் சென்னை மாஜி பிரதம மந்திரி ராஜகோபாலாசாரியார் ஆலயப் பிரவேச சட்டத்துக்கு எதிர்ப்பு உண்மையானதும், தீவ்ரமானதும் என்றும், பிரவேசம் செய்த ரீதியானது சட்ட விரோதமானதென்றும், தப்பென்றும் ஒப்புக்கொண்டிருப்பதைப் பற்றியும், இன்னும் மற்றும் பல விவரங்களைப் பற்றியதான தகவல்களை ஒரு தனி அநுபந்தத்தை சேர்த்திருக்கிறார்.

மாகாணங்களில் யாருடைய ஆட்சி?

காங்கிரஸைத்தவிர மற்ற கக்ஷியாரின் உதவியைக்கொண்டு வைஸ்ராய் நிர்வாஹஸபை விஸ்தரிப்பு முதலிய கார்யங்களை நடத்தத்தீர்மானித்திருப்பதால் மாகாணங்களில் இனி யாருடைய ஆக்ஷி நடைபெறுமென்பதைப் பற்றிப்பேச்சுக்கிளம்பியிருக்கிறது.

இப்போதுள்ள சட்டஸபையைக்கலைத்துவிட்டு கவர்னர் ஆக்ஷியே நீடிக்கப்படுமென்றும், கவர்னர்களுக்கு ஆலோசனை கூறும் உத்யோகஸ்தர்களாக இந்தியர்கள் சிலர் நியமிக்கப்படுவார்களென்றும், ஏற்கனவே இருந்த இடைக்கால மந்திரிகளைப்போல் இவர்கள் இருப்பார்களென்றும், பிரஸ்தாபிக்கப்படுகிறது. சென்னையில் யாருக்கு அதிர்ஷ்டம் காத்திருக்கிறதோ?

"பிராம்மணர்களுக்கு உத்யோகம் கொடுக்கக் கூடாது"

திருவாரூரில் நடந்த ஜஸ்டிஸ்கக்ஷிக்கூட்டத்தில், பிராமணரல்லாதார் போன்ற பிற்போக்கு வகுப்பினருக்கு நியாயமான உத்யோக விதம் கிடைத்துப் பூர்த்தியாகும் வரையில் பிராம்மணர்களுக்கு உத்யோகமே கொடுக்கக்கூடாதென்று ஸர்க்காரைக் கேட்டுக்கொண்டு ஓர் தீர்மானம் செய்யப் பட்டிருக்கிறதாம்.

திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத பாடசாலை, திருவிசலூர், தஞ்சாவூர் ஜில்லா.

(31—3—'40 தேதியோடு முடிந்த வருஷத்து கணக்குத் திட்டம் Balance Sheet)

பொருப்பு :—	ரூ.	அ.	ப.	ஆஸ்தி :—	ரூ.	அ.	ப.	ரூ.	அ.	ப.
பொது மூலதனம் சென்றவருஷத்திய				சென்ற வருஷக் கணக்குப்படி						
ஸ்டேட்மெண்டுப்படி மொத்தம்....	37770	8	9	பாடசாலைக் கட்டடம்				2500	0	0
				நாற்காலி மேஜை வகையரு சாமான்கள்				240	8	0
சம்பளம் முதலியது கொடுக்க				புஸ்தகசாலைப் புஸ்தகங்கள்				233	7	3
வேண்டியது	107	0	0	சமையல் பாத்திரங்கள் கருவிகள் முதலியன				320	9	0
				கைவசமிருந்த நெல் (140 கலம் கொள் முதல் விலைப்படி)				241	11	6
				வரவேண்டிய கடன்கள் :—						
				பெந்தகத்தில் : முதல்	14300	0	0			
				,, வட்டி	826	10	8			
								15126	10	8
				5% 1940-43 சர்க்கார் கடன்பத்திரங்கள் ரூ. 5000 விலையுள்ளது.				4900	0	0
				வட்டி :—						
				5% 1940-43 சர்க்கார் கடன்பத்திரம் ...	125	0	0			
				பாங்கில் கரண்டு அக்கவுண்டு	33	2	0			
								158	2	0
				கையிருப்பு தனம் :—						
				மதராஸ் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க் (மயிலாபூர் கிளை ஆபீஸில்)....	12939	14	10			
				ரொக்கம்	0	13	5			
				பாடசாலை பிரதம பண்டிதரவர்களிடம்	1	9	0			
								12942	5	3
				சென்ற வருஷத்திய ஸ்டேட்மெண்டுப்படி அதிக சிலவு....	705	10	7			
				நடப்பு வருஷத்திய அதிக சிலவு	508	8	6	1214	3	1
ஆக மொத்தம்	37877	8	9	ஆக மொத்தம்				37877	8	9

ஆடிட்டர் ரிபோர்டு :— 1940-ஆம் மார்ச்சு-மீ 31௨யோடு முடிந்த வருஷத்திய திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத
பாடசாலை கணக்குகளையும், அந்தக்காலத்தைப்பற்றிய ஆஸ்தி பொருப்பு ஸ்டேட்மெண்டையும், அவை சம்பந்தமான கணக்குப் புஸ்த
கங்களுடன், வவுச்சர்களுடனும் எடுத்துப் பார்த்து பரிசோதனை செய்தேனென்றும் என்னுடைய அபிப்பிராயத்தில் மேலே காட்டிய
ஆஸ்தி பொருப்பு ஸ்டேட்மெண்டானது ஷை பாடசாலையின் ஸ்திதியைப்பற்றி கணக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களின்படிக்கும்
ஸமாதானங்களின்படிக்கும் பாடசாலையின் புஸ்தகங்களின்படிக்கும் உண்மையானதும் சரியானதுமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்
கிறதென்றும் சர்டிபை செய்கிறேன்.

திருச்சினாப்பள்ளி, 21—8—40.

K. K. சுந்தரம்,
ரிஜிஸ்டர்டு அகௌண்டெண்டு & ஆடிட்டர்.

யுத்தம் ஜயம்பெற வழி என்ன?

தர்மத்தை ரக்ஷிக்க வேண்டும்

(மேல்மங்கலம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரி)

கலியின் விபரீதமான வேக அதிர்ச்சியால் ஏற்பட்டிருக்கிற மிக ஆபத்தான இந்த கொடூரமான யுத்தத்தில் நமது பிரிட்டிஷ் ஜயமடைய ஆவல்கொண்டு அதற்கு யோக்கியமான உபாயமாக ஈசுவராக்ஞையால் தூண்டப்பட்டு எழுதுகிறேன்.

தர்ம விசுவாசத்துடன், ராஜ விசுவாசத்துடன், தர்ம நீதி தவராத ராஜாங்க விசுவாசத்துடன் ப்ரகாசிக்கும் யாவரும் இந்த விக்ஞாபனத்தை பார்த்தாக வேண்டும். இந்த விக்ஞாபனம் ஜயோபாயமாக இருப்பதால் அலக்ஷ்யம் செய்திடாது கவனிக்கப்பட வேண்டுமென்று முதலில் ஞாபகப் படுத்துகிறேன். அதார்மிகமானது கேவல ரீதியில் பூலோக வாழ்க்கையை மட்டிலும் முக்கியமாக கொண்டது. ஆசுரப் பிறவிகளான துர்யோதனாதிகள் போன்றவர்களுக்குப் பொருந்தும் :- புண்ணிய பூமியில் அது உதவாது. தர்மத்தை அஸ்திவாரமாகக் கொண்டது மஹாத்மாக்களான தர்ம புத்திராதிகள் அனுசரித்தார்கள். ஈசுவரானுக்ரஹத்தோடு கீர்த்திலோகத்தில் இன்னும் சாச்வதமாய் ப்ரகாசிக்கிறார்கள். அது போல் நமது மஹிமை தங்கிய பிரிட்டிஷ் சக்ரவர்த்தி அவர்களும் அவர்களது பரம்பரையும், கவர்ன்மெண்டும் அவ்வழியில் விசேஷமாக ப்ரகாசிக்க நான் ஆசைப்படுகிறேன். சர்வ லோகங்களும், சர்வ தேசங்களும், சர்வ வர்க்கத்தினர்களும் அந்தந்த வழியில் யோக்யமாய் ப்ரகாசித்து க்ஷேமமடைய மூல காரணமானது சனாதன தர்மம் ஒன்றே என்று வீரவாதம் செய்து கர்ஜனை செய்கிறேன்.

அவ்வித சனாதன தர்மம் ப்ரகாசிக்க வர்ணாச்ரம தர்ம முறையும், சவர்ண, அவர்ண பேதமும் அனாதி காலமாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் நான்கு வர்ணத்தவர்களும், அனுலோம ஜாதிகளும் சேர்ந்து சவர்ணர்கள் என்றும், சனாதனிகளென்றும் ப்ரதிலோம ஜாதிகளும், பாஹ்யர்களும் சேர்ந்து அவர்ணர்கள் என்றும், அதில் ப்ரதி லோமர்கள் சனாதன பக்தர்களென்றும், இவ்விதம் அனாதி காலமாகவே இப்புண்ய பூமியில் அணிவகுக்கப்பட்டு வைதீக லௌகீக கார்யங்கள் ஒழுங்காய் ஒற்றுமையாய் கொஞ்ச காலத்துக்குமுன் வரை நடந்து உலகில் யாவரும் மேன்மையுடன் வாழ்ந்தார்கள் என்பதை இவ்வுலகினர் கண்டிப்பாய் அறிய வேண்டும். அவ்வித தார்மீக முறை தடங்கலன்னியில் விருத்தியாவதற்கு சாதகமாய் புண்ணிய பூமியாம் பாரததேசமும் பிராம்மண வர்க்கமும், கோவர்க்கமும் சர்வேசனால் முதலிலேயே அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உலகில் அவனவனாகவோ, கூட்டமாகவோ முன்போல் யோக்யமாய் முன்னேறட்டும், இல்லாமலிருக்கட்டும்; அது அவனவனது பூர்வ வினை என்று அது விஷயம் கவலை அதிகப்படாமல் சாதுக்கள் ஒதுங்கிக் கொள்வார்கள். தற்சமயம் காலக் கொடுமையால் விபரீத குணம் உள்ளவர்கள் அதிகமாய் பலான ரீதியில் நொறுங்கிக் கிடக்கும் ஜன சமுதாயங்களிடம் வாயடி, கையடி அடித்து வாசா வேதாந்தம் பேசி தங்களுக்கு மெஜாரட்டி பலம் என்று உறுமிக்கொண்டு பத்திரிகா பிரசாரங்களின் மூலமும், விபரீத சினிமாக்கள் மூலமும், விபரீதக் கூட்டங்கள் போட்டு பேசியும் தங்களுக்குள் எவ்வளவு கலகங்கள் இருந்தாலும் தர்மத்தை, தார்மீகர்களை கெடுப்பதில் ஒற்றுமைகொண்டு இவ்விதம் பிரதி ஜாதி மத தர்மாசரணைகளுக்கு தங்களது அடா பிடித்தனத்தாலும் விபரீத சட்டங்களாலும் கெடுதல் உண்டுபண்ணினதையும் இன்னும் உண்டுபண்ண யத்தனம் செய்வதையும், தர்ம தேவதை எப்படி சகிப்பாள்? சகிக்கவே மாட்டாள்.

வர்ண தர்மத்திற்கும் ஜாதி முறைக்கும் அடிப்படையான விவாஹ தர்மத்தை கெடுத்தார்கள். அந்தந்த ஜாதீய முறையாய் குழந்தைகள் விருத்தியடையக் காரணமான புராதனமான வித்யா முறையையும் தொழிற் கல்வி வகையறா முறையையும் கெடுத்தார்கள். நதி முதலிய தீர்த்த கட்டங்களின் அழகான வரம்புகளை நாசப்படுத்தினார்கள். அந்தந்த வீதி ரஸ்தாக்களின் பெருமையான ஒழுக்க பழக்கங்களை பாழ் பண்ணினார்கள். சமபந்தி போஜனத்தை ஜனங்களிடம் திணிக்கிறார்கள். யாரும் எதையும் பேசலாம், எழுதலாம், ஓட் கொடுக்கலாம். எதற்கும் ப்ரதி நிதித்வ காலம்; இது தான் சமதர்மம் என்று கத்துகிறார்கள். யாரும் எத்தொழிலையும் செய்யலாம். ஜாதி முறை கிடையாது, எங்கள் வாக்கியமே வேத வாக் என்று திமிராக யத்னம் செய்கிறார்கள். க்ராம வாழ்க்கையை குலைத்து விட்டார்கள். ஜனங்களிடம் தர்ம துரோகத்தோடு சூழ்ச்சியாக, உள்நாட்டில் பலவான கலவரைகளையும் ராஜ துரோகத்தையும் உண்டுபண்ணி விடுவார்களோ என்று சாதுக்கள் சம்சயமடையும்படி நடக்கிறார்கள். ப்ரதி குடும்பத்திலும், ஜாதீய தர்மம் செய்யப்படும் சமயம், யாரும் நுழைந்து அதைக் கெடுக்க சுகாதாரச் சட்டம் என்றதை உண்டுபண்ணி இருக்கிறார்கள். போருக்குறையாக ஆலய வரம்பை-மூர்த்தி சாந்நித்யத்தை அநியாயமாய் கெடுத்தார்கள். கெடுக்க யத்னமும் செய்கிறார்கள்.

இனி இவ்வித குணக் கேடடைந்த ஆசுர ஸ்வபாவமுள்ளவர்களை இவ்வுலகம் தாங்காது. இவ்வித விபரீத குணமுள்ள பிறவிகளுக்கு தார்மீகமான பிரிட்டிஷ் அரசாட்சியில் இந்தியா கவர்ன்மெண்டு இடங்கொடுத்து ஒத்தாசை புரிந்தது எவ்வாற்றாலும் நியாயமாகாது. ஈசனது அணிவகுப்பான ஜாதி தர்மாதிகளை அழிக்க முடியுமா? எவனாலும் முடியாது? குருட்டு குதிரை, நொண்டிக் குதிரை, முறட்டுக் குதிரை, மந்திக் குதிரை, சுறுசுறுப்பான வேகமான நல்ல குதிரை என்றுதான் அழைக்கப்படுமே தவிர மற்றொரு பிறவியாகச் சொல்ல முடியாது. அதுபோல் அந்தந்த ஜாதி தர்ம ரீதியில் நல்லவன் கெட்டவன் என்றுதான் அவனவன் சரீரம் இருக்கும் வரை அழைக்கப்படுவனே தவிர, மற்ற ஜாதியாய் உலகம் அழைக்காது. ஈசனது அணிவகுப்பையும் அவனது ஆக்ஞா ரூபமான சாஸ்திர மரியாதையையும், அவ்வழியில் நிற்கும் உத்தமர்களையும், குலைக்க யத்னம் செய்தவர்கள் தான் முன் காலத்திலும் அழிந்தார்கள். இப்பவும் அவ்வித கலி ஸ்வபாவமுள்ளவர்கள் தான் பலான ரீதியில் அழிவார்கள் என்பதை இவ்வுலகம் அறியட்டும்.

இவ்வித அதார்மீகமான சட்ட திட்டங்களால் அங்கங்கு மருந்துபோல் உள்ள ஒதுங்கியிருக்கும் சாதுக்கள் மனம் புண்ணாகிவிட்டது ஆதரவில்லாமல் சிதறிக் கிடக்கும் பிராமணோத்தமர்களுக்கும் அந்தந்த ஜாதீய உத்தமர்களும் இவ்விதம் கதறிக் கொண்டிருக்கும்படி விட்டு வைப்பது தர்மமாகாது. சனாதனிகளான சவர்ணர்களுக்கு மட்டிலும் அனாதி காலமாகவே முறையாய் பொது சொத்தான ஆலயாதிகளையும் விவாஹாதி உத்தம தர்மங்களையும் மற்றவர்களிடம் ஒப்படைப்பது கொஞ்சமேனும் சாதுக்களால் ஒப்புக்கொள்ள முடியாது. சகிக்க முடியாது. இப்புண்ய பூமியில் கோவதம் எக்காரணத்தாலும் கூடவே கூடாது. சனாதனப் பற்றுள்ள ஒரு தனி மனிதன் உள்ள வரையிலும் அவ்வித சொத்துக்களை, தர்மாதிகளை, இப்புண்ய பூமியில் மாற்ற எவருக்கும் அதிகாரம் கிடையாது. அவ்விதமே ஸ்திரீ தர்மம் அழிக்கப்படக் கூடாது. விபரீதம் செய்தால் சர்வ நாசம் தான் ஏற்படும் என்பதை உள்ளபடி யாவரும் அறிந்து ஞாபகமாய் இருக்கவேண்டும். பழமையான அபூர்வ பதார்த்தங்களை காப்பாற்றி வைப்பது அரசாங்கத்தின் கடமை என்பதை கண்டிப்பாய் ஞாபகப்படுத்துகிறேன். இது விஷயத்தில் உதாசீனமாயிருப்பது நியாயமாகாது. மனம் நொந்து ராஜ விசுவாசத்துடன் தெரிவித்துக்கொள்கிறன். உலகில், யோக்யமான பிராம்மணோத்தமன் ஒருவன் சரீர யாத்திரைக்கும் குடும்ப கால க்ஷேபத்திற்கும் திண்டாடுவனாகில் ஒரு வேளை சாப்பாட்டிற்கு வகையன்னியில் தவிப்பனாகில் அது உலகின் அழிவிற்கு காரணம் என்று சாஸ்திரம் முறையிடுகிறது. இவ்விதமிருக்க, தர்ம தேவதையே மிக வாட்டமுறுவதை நினைக்க என்போன்ற பிராமணன் என்ன செய்ய முடியும், என்ன சொல்ல முடியும். தர்ம ரீதியில் ஈசனிடமும் தங்களிடமும் முறையிடுகிறேன்.

குழந்தைகளுக்கு வியாதி எல்லாம்
சேர்க்கை ஆஹாரத்தினால் தான்.
தாய்ப் பாலில் வளரும் குழந்தைக்கு
கட்டிமாந்தம் முதலிய நோய்கள் வாரா.

ஆயுர்வேதாசார்ய
V B. நடராஜ சாஸ்திரீ அவர்களின்

பயஸ்யா

தாய்ப் பாலை அளவிலும் ஸாரத்திலும்
அபிவிருத்தி செய்யும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ 2—4—0 தான்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
அல்லது நேரில்
'ஆத்ரேய'
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி.
பயஸ்யா— புஸ்தகம் வேண்டுவோருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

ஆலயப் பிரவேசம்.

'इत:कोन्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ।'
"மதக்கொள்கைகள் எவ்வண்ணம் சீர்குலைக்கப்பட்டால் தான் எனக்கென்ன? என் உடம்பை யாரும் வாளால் வெட்டவில்லையே!" என்று வாளாயிருப்பவனே மூடன். அசட்டை தூக்கத்தை உதறித்தள்ளி மத விழிப்பை உண்டுபண்ணி ஆத்ம ஸ்வராஜ்யத்தில் பிரவேசிக்க மார்க்கத்தைப் புகட்டுவது ஆலயப்பிரவேச புஸ்தகம் ஒன்றே. பண்டிதர்களால் மிக புகழப்பெற்றது. 6-அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்து பிரதியை அடையமுந்துங்கள்.

கிடைக்குமிடம்:—
கண்டமங்கலம்
பாலசுப்பிரமணிய அய்யர்
10, பிலாத்தோப்பு, மைலாப்பூர், மதறாஸ்

ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்தில் யோக சாஸ்திர தத்வம்.

(மாஜி ஸப்-மாஜிஸ்டரேட் ஸ்ரீமான் அய்யாதுரை அய்யர்)

அத்யாயம் I

ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரித்திரம் மகாபாரதத்தை சேர்ந்த ஹரி வம்சத்தின் பாகமாகிய விஷ்ணு பர்வாவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சரித்திரங்களெல்லாம் ஒரு யோகியின் செய்கையாகவும் அர்த்தம்செய்ய இடமிருக்கிறது அவர் செய்த முக்கியமான செய்கை ஒவ்வொன்றையும் எடுத்து அது யோகத்தின் அம்சமான செய்கைகளாக அடியில் விவரிக்கப்படுகிறது.

கோவர்த்தனகிரியை குடையாக பிடித்தது

அவர் தன்னுடைய ஐந்தாவது வயதில் கோவர்த்தன கிரியை குடை போல் தூக்கி பிடித்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. "கோ" என்ற பதத்திற்கு பசு வென்றும் தலை மயிர் என்றும் அர்த்தங்கள் உண்டு.

"கோ" வென்ற பதத்தை பசு என்று அர்த்தம் செய்தால் கோவர்த்தனகிரி என்பதற்கு பசுவை வளர்க்கும் மலை என்று அர்த்தமாகிறது. அது ஸாதாரணமான அர்த்தம். கோ என்பதற்கு தலை மயிர் என்று அர்த்தம் செய்தால் கோவர்த்தன்கிரி என்பதற்கு அதை வளர்க்கும் மலை என்று அர்த்தமாகிறது. சிரஸை மலை என்று கவிகள்சொல்லியிருக்கிறார்கள் தாயுமானவர் "சிரகிரி விளங்கிவரும் தக்ஷிணாமூர்த்தியே சின்மயாநந்த குருவே" என்று பாடியிருக்கிறார். ஆகையால் கோவர்தன கிரி என்பதற்கு மயிரை வளர்க்கும் சிரசு என்று அர்த்தம் செய்யலாம். ஆகையால் ஸ்ரீ கிருஷ்ணன் ஐந்து வயதில் தன் சிரஸை 7 நாள் அசையாமல் நிறுத்திவைத்துக் கொண்டிருந்தார் என்று அர்த்தம் செய்யலாம். அந்தப்படி நிறுத்தி 7 நாள் அசையாமல் வைப்பதுயோக நிஷ்டையின் அங்கமாகிறது. யோகத்திற்கு ஆரம்பம் செய்கையில் சிரஸை அசையாமல் நிறுத்திவைப்பது அஷ்டாங்கத்தின் ஒன்றாகிய ஆஸனத்தின் ஒரு பாகத்தை அனுஷ்டித்தார் என்று அர்த்தம் செய்ய இடம் கொடுக்கிறது.

காலிங்கநர்த்தனம்

ஸ்ரீ கிருஷ்ணன் தன் 8 வது வயதில் யமுனைநதியில் ஒரு மடுவில் காளிங்கன் என்ற பெரிய பாம்பு வசித்து கொண்டு தன் விஷத்தால் யமுனைநதியின் ஜலத்தை விஷமாக்கி கெடுப்பதாகச் தெரிந்துக்கொண்டு தான் அந்த மடுவில் குதித்து அந்த பாம்பின் தலையில் நின்றுகொண்டு நர்த்தனம் செய்து அந்தப்பாம்பை அழுத்தி பாதாள உலகத்துக்கு அனுப்பியதாக சொல்லப்படுகிறது.

அதை யோகத்தின் அங்கமாக அர்த்தம் செய்யலாம். சரீரத்தில் உள்ள ஸுஷும்ண நாடியானது மூலாதாரத்திலிருந்து முதுகு எலும்புகளின் வழியாக சிரஸிலுள்ள மூளைக்கும் போகிறது. அந்த சிரஸின் உள்பாகம் விரிந்து பாம்பின் படமெடுத்ததலை போலும் ஸுஷும்ண நாடி அந்தப்பாம்பின் உடல் போலுமிருக்கிறது. இந்த ஸுஷும்ண நாடியை யமுனா நதியாகவும் ஷட்சக்ரநிரூபணத்தில் சொல்லி யிருக்கிறது.

அந்த ஸுஷும்ண நாடிக்குள் இருக்கும் துவாரத்தில் நிறைந்திருக்கும் விஷயமானது பாம்புமேல் உருவமாகமாறுகிறது. அதை காளிங்கன் என்ற பாம்பாக சொல்லியிருக்கிறது அந்த விடமானது மூலதாரத்திலுள்ள குண்டலினியை சிரஸுக்கு ஏற்ற தடை செய்து கொண்டிருக்கிறது. ஷட்சக்ர நிரூபணமென்ற சக்ர சாஸ்திரத்தில் சிரஸில் உச்சியில் மதுவென்று ஒரு சக்ரம் இருப்பதாகவும் அதில் ஈச்வரனிருப்பதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. அதையனுசரித்து உபனிஷத்திலும் சிரஸில் ஈசுவரன இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தான் சிறறம் பலமென்றும் அதில் சிவன் இருந்து நர்த்தனம் செய்வதாக நந்தன் சரித்திரத்தில் விவரமாகக் சொல்லப்பட்டிருக்கிறது,

அதைத்தான் காளிங்கனகிற பாம்பின் சிரஸிலிருந்து ஸ்ரீகிருஷ்ணனகிற இசுவ்ரன் நடனம் செய்து அந்த பாம்பாகிற விஷக்காற்றை அழுத்தி மூலாதாரமாகிற பாதாள உலகத்திற்கு அனுப்பினதாக சொல்ல இடமிருக்கிறது. அந்தப்படி செய்தால் பிறகு மூலாதாரத்திலுள்ள குண்டலி சக்தியை யோகத்தினல் ஸுஷும்ண நாடி வழியாக சிரஸிற்கு ஏற்ற இலகுவாகயிருக்கும். அப்படி ஸ்ரீகிருஷ்ணன் யோகத்தால் குண்டலி சக்தியை சிரஸில் ஏற செய்தகைத்தான் நரகாஸுரவதமாக பின்னல் விபரிக்கப்படும்.

ஸ்ரீ தரு ராகவேந்தர ஸ்வாமிகளின் 269-வது புண்யதின மகோத்ஸவம்

தஞ்சாவூர்

துங்கபத்திரா தீரத்தில் மந்திராலயம் என்னும் க்ஷேத்திரத்தில் பிருந்தாவனங் கொண்டு இக்கலியினும் தம்யோக மகிமையால் ஸகலருக்கும் ஸகல அபீஷ்டங்களைத் தந்தருளிக் கொண்டு விளங்கும் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் புண்ய தினமகோத்சவம் நாடெங்கும் 18—8—40 21-8-40 கொண்டாடப்பட்டது. தஞ்சாவூரில் ஐயங்குளக்கரையிலுள்ள தண்ணீர்ப் பந்தலில் ஸ்ரீமான் அனந்தாசாரியாரால் வெகு காலமாய் நடத்தப்பட்டு வருவது போலவே இவ்வருஷமும் ஷை தினங்களில் 800 பேருக்கு சமாராதனையும் 5 பேருக்கு அலங்கார பந்தி போஜனமும் மாலையில் கும்பகோணம் ஸ்ரீமான் கூடாகுளம் மாதவாசாரியார், ஸ்ரீஎம். ராமராவ் ஸ்ரீபூவராகாசாரியார், பாகவதம் ரங்கநாதாசாரியார், முதலியவர்களால் சாஸ்திர சம்பந்தமான உபந்யாஸங்களும் வெகு விமரிசையாக நடத்தப்பட்டன. வடவாற்றங் கரையில் உள்ள பிருந்தாவனத்தில் சுமார் ரூ. 2000 செலவில் ஓர் அழகிய கட்டடமும் சமையலறை முதலிய அமைப்புகளுடன் கட்டப்பட்டு அதன் ஸம்புரோக்ஷணமும் சாஸ்திர ரீதியாகச் செய்யப்பட்டது.

மாயவரம்

இந்நகரில் காவேரிப் பாலத்தின் அருகிலுள்ள ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலில் ஸ்ரீமான் வாஸுதேவாசாரியாள் பெரும் முயற்சியால் ஷை ஸ்வாமிகளின் ஆராதனை 400 பேருக்கு சமாராதனையுடனும் 3 பேருக்கு அலங்கார பந்தி போஜனத்துடனும் நடத்தப்பட்டது. மாலையில் ஸ்ரீமான் எம். ராமராவ்பி.ஏ. அவர்களால் 'ஸ்ரீ ராகவேந்திரரின் அரிய மகிமை' என்ற விஷயமாக உபந்யாஸமும் இரவில் கும்பகோணம் லலித கலா வல்லபவாதிராஜ பாகவதர் பி.ஏ. அவர்களால் "ஸுபத்ரா பரிணயம்" என்ற ஹரிகதா காலக்ஷேபமும் நிகழ்ந்தன. [நமது நிருபர்]

திருவல்லிக்கேணித் தமிழ் சங்கம்

திருவோணத்திரு நன்னாட்டிருக் கொண்டாட்டம்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 17—8—40 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் திருவோணத்திரு நன்னாட்டிருக் கொண்டாட்டம் ஆரம்பமாகியது. திருமடத்தில எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நிகமாந்த மகா தேசிகன் விசேஷ அலங்காரத்துடன் முன் மண்டபத்தில் சீரியவாதனத்திற்றிகழ்ந்து விளங்கினர்.

சங்கக்காரியதரிசி தொடக்கத்தில் "ஆராதவருளமுதம்"; "உலகம் யாவையும்"; "கண்ணனடியினை" என்ற முப்பாசுரங்களை கடவுள் வாழ்த்தாகப்பாட, சங்கத் தலைவர் ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார் அவர்கள் திருவோணத்திருநாள் பெருமையையும், திருவோணத்தானின் சீர்மையையும், "தொண்டரெல்லீரும் வாரீர் என்பதனையே சங்கம் ஒலிக்கின்ற தன்மையையும் எடுத்தியம்பி அந்நன்னாட்டு கொண்டாட்டத்துக்குத் தலைமை தாங்க இயைந்துள்ள அந்தணாளர் முதலியோருக்கு இனிய செந்தமிழில் நல்வறவுகூற, சுதேசமித்திரன் உதவிப்பத்திராதிபர் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மாசாரியார் அதனை ஆமோதிக்க, சென்னை அக்கவுண்டெண்ட் ஜெனரல் ஸ்ரீமான் வி. எஸ். சுந்தரமய்யங்கார் அவர்கள் அக்ராஸனம் வஹிக்க, சங்க மஹா வித்வான் ஸ்ரீ கோபாலாசார் ஸ்வாமி வேதாந்தகுரு வணக்கமாகத் தாமியற்றிய இரு பாக்களைப்பாட, திருமடத்துத்திருவாராதன கைங்கர்யம் புரிந்து வரும் வித்வான் ஸ்ரீதையார் ஸ்ரீநிவாஸாசாரியாரும், வில்லூர் ஆசுகவி ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியாரும் வடமொழியில் தாங்கள் கவனஞ் செய்துள்ள சுலோகங்களை வாசிக்க, பந்தல்குடி வித்வான் திருமலை அய்யங்கார் தாமியற்றிய நான்கு பாடல்களை இசையுடன் பாட ஸ்ரீ வேதாந்த குரு அணிந்து கொண்டிருந்த பூமாலைகளை அருச்சகர் களைத்து கொடுக்கப் பெற்ற சங்கத்தலைவர் முறையே அவைத் தலைவருக்கும் சொற்பொழி வாளருக்கும் இட்டு சங்க வெளியீடான வகுளமாலைத் தொகுதியையும் சுந்தரனருக்கு உவகையுடன் அளித்துவந்தார்.

தலைவர் முன்னுரையாகக் கூறுகையில் ஸ்ரீகேசவய்யங்கார் உரைத்ததைப்பின்பற்றிச்சற்று விளக்க, வித்யாரத்நாகரம் ஸ்ரீஉப வே. கொடைவாசல் நரசிம்மாசார் ஸ்வாமி தேசிகன் விளக்கியவழி எனும் அரிய விஷயம் பற்றி வெகு விஸ்தாரமாக தேசிக தத்துவம், மறை காட்டியமார்க்கம், கீதாசாரியன் விளம்பிய நெறி, தேசிகன் விளக்கிய முறை யோகாப்பியாச மார்க்கம் பக்தி பிரபத்தியின் பாகுபாடுகள், பிரம்மாநந்த சரஸ்வதியின் அநுபவமொழிகள், சரணாகதி வைபவம், அதனது அங்கங்கள், தாயுமானவர் பிரபத்தி தர்மத்தைம் பாடிய பிரகாரம், தேசிகமாலைப் பாசுரங்களிற் பொதிந்துள்ள உண்மை முதலியப் பகுதிகளாகப் பிரிந்து விளக்கமாக உபந்யஸிக்க, தலைவர் முற்றுரையில் தாம் அநுபவித்துக் கொண்டிருந்த முறையையும் உபந்யாஸகர் போன்ற வித்வான்களைப் பெருமைப்படுத்த வேண்டிய மாதிரியையும், சங்கத்தின் நோக்கங்களிற்றனக் குண்டாகியிருக்கும் பெருமிதத்தையும் நன்கு தெளிவித்தார்.

காரியதரிசி வந்தனோபசாரம் அளிக்கையில் ஒவ்வொரு திருவோணத்திரு நன்னாளும் இனி இடை விடாது கொண்டாடப் பெறுமென்றும், கூடிய சீக்கிரத்தில் சங்கத்தில் ஆங்கிலப் பகுதியும் திறுவப்பெறுமென்றும் எடுத்துரைக்க கொண்டாட்டம் இரவு 7மணிக்கு இனிது நிறை வேய்தியது.

ப. ரெ. திருமலை அய்யங்கார், காரியதரிசி.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறுர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

திப்பிராஜபுரம்

ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா

10—8—40 முதல் 14—8—40 வரையில் 5 தினங்கள் வரகூர் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்கள் "சந்தியாவந்தனம்" என்னும் அரியதான நாம் தினப்படி அனுஷ்டிக்க வேண்டிய முக்யமான கர்மாவின் விஷயத்தைப் பற்றி மேற்கொண்டும் ஆரம்பித்து ப்ரதிபத தாத்பர்யத்துடனும், செய்யும் விதி, கர்மம் இதுகளுடன் "உபஸ்தானம்" வரையில் நடந்திருக்கிறது.

16—8—40 சனிக்கிழமை வரகூர் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் "உபாகர்ம" என்னும் விஷயத்தைப் பற்றியும், அதின் ரஹஸ்யத்தைப் பற்றியும், அதை அனுஷ்டிக்க வேண்டியதைப் பற்றியும் மறுநாள் ப்ராயச்சித்த கர்மாவாகிய "காயத்ரீ ஜபம்" என்பதைப் பற்றியும் உபன்யஸித்தார்.

(ந-நி)

திருச்சி

பாகவதப்ரவசன ஸமாப்தி

நமது ஆர்யதர்மப் பத்திரிகையில் ஏற்கனவே அறிவித்தபடி 11—8—40-ல் ஷை உத்ஸவங்கள் வெகு விமர்சையாக நடந்தேறின. அவ்வமயம் ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாஸ்வாமிகளால் அனுக்ரஹபுரஸ்ஸரமாய் பிரஸாதத்துடன் தந்தருளிய ஸால்வையை ஜம்புகேச்வரம் ஜகத்குரு வித்யாஸ்தானம் தலைவரும் குடந்தை அத்வைத ஸபையின் பரீக்ஷாதி காரிகளுமான ஸ்ரீசாஸ்திரரத்னகர ஸ்ரீ ராமா சாஸ்திரிகள் சபையில் விஜயம் செய்து உபன்யாஸகரின் திறமையை புகழ்ந்து விட்டு ஸால்வையை சாத்தினார்கள். பிறகு தர்மக்ஞ ஸ்ரீ சுந்திரேச சாஸ்திரிகள் உபன்யாஸகரை புகழ்ந்து இவாள்தான் உபதேச ஸ்தானத்திற்கு அர்காள் என்னும் ஷை உபன்யாஸகருடைய குலம் ஆசாரம் அனுஷ்டானம் முதலிய ஸத்குணங்களை தெளிவாய் ஸபையோர்களுக்குப் படும்படி கூறினர். வந்தனோபசாரத்துடன் இனிது நடந்தேறியது.

(ந-நி)

சீர்காழி

உபாகர்மம்

ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமி ஆலயத்தில், வழக்கப்படியே ருக், யஜுர், உபாகர்மாக்கள் சென்ற 17—8—40 ஸ்திரவாரத்தன்று நன்கு நடைபெற்றன. அச்சமயம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்ய சுவாமிகள், உபமுத்திராதிகாரிகளாகிய பிரம்மஸ்ரீ டி. கல்யாணராமய்யரவர்கள் மூலம் மிக்ககருணையுடன் அனுப்பியதான ஸ்ரீ வியாஸாக்ஷதையை அங்கு வந்திருந்த ஸ்ரீ மதாசார்ய சிஷ்ய கோடிகளுக்கு அளிக்கப்பெற்றது.

ஆஸ்திக ரத்னங்களில் அனேகர், ஸ்ரீமதாசார்யாள் அவர்களின் ஆக்ஞையின்படியே ஆசார சீலர்களாயிருந்து அத்யயனம் செய்வதாய் ஒப்புக்கொண்டதின் பேரில், அவரவர்களின் சாகைகளின்படி வேதாரம்பம் செய்வதாய் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீமத் பகவத் கீதோபன்யாஸம்

சீகாழி ஸந்நிதி வீதி ரிடயர்ட் போஸ்ட் மாஸ்டர் பிரம்மஸ்ரீ டி. கல்யாணராமய்யரவர்களது கிரகத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் ஆஜ்ஞையை சிரஸா வகித்து, சீகாழி பிரும்மஸ்ரீ ரா. சுப்பராமய்யரவர்களால் நடந்து வரும் ஸ்ரீ பகவத் கீதோபன்யாசத்தில், 25-8-40 பானுவாரமாகிய இன்று 18வது உபன்யாஸம் வழக்கப்படியே நடந்தது. அதற்கு ஆசாரபக்தி யுக்தாளாகிய ஆஸ்திக ரத்னங்களில் அனேகம் ஸ்திரீ புருஷர்கள் வந்திருந்தனர். இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமியானதினால். முதலில் ஸ்ரீ கீதாசார்யனாகிய ஸ்ரீ கண்ணபிரானது திவ்யாவதார கதையானது, ஷை உபன்யாசகராலேயே சொல் நயம் பொருள் நயம் நிறைந்து நவரசங்களுக்கு செறிந்துள்ளதாய் நன்கு உபன்யசிக்கப்பெற்றது. அனந்தரம் ஆங்கு வந்தோரனைவர்களுக்கும் பகவத் பிரசாதம விநியோகிக்கப்பெற்றது.

ந. நி

ஸ்ரீ வைகுண்டம்

ஸ்ரீவைகுண்டத்துக்கு அடுத்த "நத்தம" என்று சொல்லப் பட்டதும் ஸ்ரீநம்மாழ்வாரால் 'வரகுண மங்கை' என்று பாடப் பட்டதுமான திவ்ய தேசத்தில் நூதனமான இந்த ஆவணி-மீ 22 தேதி (5—9—40) பிரம்மோத்ஸவம் ஆரம்பித்து நடத்தவேணுமென்று ஷை கோவில் மானேஜிங் டிரஸ்டி டி. எஸ். தாதாசாரியாரவர்களும் மற்ற தர்மகர்த்தாகளான ஸ்ரீ கோவிந்த அய்யங்கார் அவர்களும் ஸ்ரீராமலிங்க முதலியாரவர்களும் H. R. E. போர்டு சாங்ஷனுக்கு கேட்டிருக்கிறார்கள்.

ராகவன்

வைஸ்ராய்—ஆனே ஸந்திப்பு

தேசீய காங்கிரஸ் கக்ஷித்தலைவரான ஸ்ரீ ஆனே வைஸ்ராயை ஸிம்லாவில் ஸந்தித்து பேசினார். நிர்வாஹ ஸபையில் ஸ்தானம் பெற அவர் சிலருடைய பெயரை பிரஸ்தாபித்திருப்பதாகத் தெரிகிறது.

ஹிந்து மஹா ஸபைத் தலைவரான ஸ்ரீ ஸவர்க்கார் சரீர அஸௌகர்யம் காரணமாக வைஸ்ராயைக் காண முடியவில்லை

ஆதலால் ஹிந்து மஹா ஸபையின் கருத்தைக்கடித மூலம் வைஸ்ராயிக்கு அவர் அனுப்பி விட்டார்.

இருட்டறைக் கதை மறையும்

கல்கத்தா இருட்டறை சரித்திர ஞாபக சின்னத்தை அப்புறப் படுத்திவிட இந்தியா கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்து விட்டார்கள். அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இருட்டரைஸம்பவசரித்திரத்தை உண்மையென்று போதிக்கும் சரித்திரபுஸ்தங்கங்களை பள்ளிக்கூடக்களில் பாடமாக வைக்கக் கூடாதென்று வங்கசட்டசபையில் தீர்மானிக்கபட்டது.

THE SANATANA DHARMA
OR
THE HINDU VIEW OF LIFE
BY
SRI SANKARACHARYA
of
SRI KANCHI KAMAKOTI PITHAM
Translated from the original in Tamil
BY
V. R. SUNDARARAMAN, M.A.
With a Foreword by
Sir MANMATHANATH MUKERJEE, Kt.
Ex-Chief Justice, High Court, Calcutta.
Price Rs. 1-8-0... Postage extra.
For Copies Apply to:—
The Manager,
SRI JANARDANA PRINTING WORKS, LTD.,
KUMBAKONAM.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikacharjar and S, Kalyanasundaram,